**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

# S.C.No. 37 of 2023

| | | |
|---|---|---|
| Deposition of **P.W. 1 (L.W. 1 )** | } Prosecution<br>} Defence<br>} | |
| Name of the Witness | : | திரு. முரளி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemanly affirmed and sworn in this court, in accordance with provisions of Act of 1873 on **10.07.2023.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி மாவட்டம், லளிகம் கிராமத்தில் வசித்து

வருகிறேன். நான் தற்போது இளநிலைபொறியாளர் மேற்கு தருமபுரியில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக சோளக்கொட்டாய் இளநிலைபொறியாளர் இயக்கமும், பராமரிப்பு துறையில் பணிபுரிந்து வந்தேன். இண்டூர் அதகபாடியும் அப்போது கவனித்து வந்தேன். 6.3.2020 தேதி இரவு பணியில் முனியப்பன் கம்பியாளர் பணியில் இருந்தார். அடுத்த நாள் 7.3.2020 அதிகாலை 1மணிக்கு முனியப்பன் எனக்கு போன் செய்து பார்த்தால் அடையாளம் சொல்ல கூடிய மூன்று பேர் அதகாபடி துணை மின் நிலையத்தில் உள்ளே நுழைநது அவரை தாக்கி கேட் சாவியை வாங்கி டாடா ஏசியை எடுத்து வந்து வீட்டிற்கு கொடுப்பதற்காக வைத்திருந்த மின் கம்பிகளை எடுத்து போய் விட்டதாக சொன்னார். நான் உடனே துணை மின் நிலையம் வநதேன். ரூபாய் 1,80,000/ மதிப்புள்ள 10 கட்டுகள் மின் கம்பிகள் காணாமல் போயிருந்தது தெரிய வந்தது. நான் என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னேன். இது சம்பந்தமாக நான் இண்டூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம நடப்பதற்கு முன்பாக தான் அந்த துணை மின் நிலையத்திற்கு கூடுதல் பொறுப்பில் வந்தேன். அந்த துணை மின் நிலையத்தில் என்னென்ன மின்சார துறைக்கு தேவையான என்னென்ன

தடவாள பொருள்கள் வைக்கப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். துணை மின்நிலையத்தில் என்னென்ன தடவாள பொருள்கள் இருக்கிறது என்பதற்கு பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். அந்த பதிவேடு என்னுடைய பொறுப்பில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த அலுவலக பதிவேடுகளில் எத்தனை மின்சார இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த நேரத்தில் 20,000மின் இணைப்புகள் இருந்தது. இண்டூர் மின்சார வாரிய அலுவலகத்திற்கும் அதகபாடி துணை மின் மின்சார நிலையத்திற்கும் 6, 7 கிமீ தூரம் இருக்கும். அதகபாடி துணை மின் நிலையத்திற்கு இரவு காவலர் யாரும் இல்லை. மின்கம்பியாளர் தான் அந்த பொருள்களை இரவில் பார்த்து கொள்வார். வாட்ச்மேன் பதவியே கிடையாது.

2) துணை மின்நிலையத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால சரிசெய்ய கம்பியாளரை வைத்திருந்தோம். அதகபாடி துணை மின் நிலைய கேட்டிலிருந்து 60அடியில் தான் மின்கம்பிகள் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அங்கு சம்பவத்தின் போது எத்தனை கட்டுகள் வைக்கபப்பட்டிருந்தது, எத்தனை கட்டுகள் திருடு போனது என்றால் 10 கட்டுகள் இருந்தது. 10கட்டுகளும் திருடு போனது. என்னுடைய புகாரிலும், போலிசார் என்னை விசாரிக்கும் போது 10 கம்பி கட்டுகள் இருந்தது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். காணாமல் போனது அலுமினிய மின் கம்பிகள். ஒரு

கட்டு எத்தனை அடி இருக்கும் என்று என்னால் சொல்ல இயலாது. கேட்டை திறந்து கம்பிகளை வண்டியில் எடுத்து செல்வதற்கு 1/2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். கம்பியாளர் முனியப்பன் வெளியில் போய் சத்தம் போட்டிருந்தால் மக்கள் வந்திருப்பார்கள் என்றால் சரிதான். இரவு 1 மணிக்கு முனியப்பன் எனக்கு போன் செய்த போது நான் வீட்டில் இருந்தேன். நான் 7ம் தேதி காலை 10 மணிக்கு தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்திற்கு நான் 8 மணிக்கு கொடுத்தேன். புகாரை 8 மணிக்குகொடுத்து விட்டேன்.

3) என் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து பிறகு தான் புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். என்னுடைய புகாரில் போலிஸ் விசாரிக்கும் போது இந்த சம்பவம் சம்பந்தமாக உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகாரை கொடுத்து விட்டு சோளக்கொட்டாய்க்கு அலுவலக பணிக்கு போய் விட்டேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா, மோப்பநாய் வந்ததா, கைரேகை நிபுணர்கள் வந்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசிடம் எங்களுடைய ஸ்டாக் ரிஜிஸ்தரை ஒப்படைக்கவில்லை. முனியப்பன் என்னிடம் அடையாளம் தெரியாத 3 நபர்கள் தான் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். முனியப்பனுக்கு இடது பக்க தோல்பட்டைக்கு கீழே காயம் ஏற்பட்டிருந்தது. இண்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு

முனியப்பன் போனார். அவருடன் எங்கள் மின் பணியாளர் போனார். மருத்துவர் அவரை பரிசோதித்து ஓபி சீட் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது.

*4)* காணாமல் போனதாக சொல்லும் ஒரு மாதம்முன்பாக மின் கம்பிகள் சிறிது சிறதாக காணாமல் போய் விட்டது என்றாலும், அலுவலக ஆய்வின் போது பிரச்சனை ஏற்படும் என்பதால் உயர் அதிகாரிகளின் ஆலோசனை பேரில் பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், முனியப்பன் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதகபாடி துணை மின் நிலையத்திற்கு தனியாக இரவு காவலர் உள்ளார் என்றால் சரியல்ல. திருடு போனதற்கு ஆதரமான ஸ்டாக் ரிஜிஸ்டரை ஒப்படைக்காததால் நான் யூகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

## S.C.No. 37 of 2023

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of **P.W. 2 (L.W. 2 )** | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு.சந்தோஷ் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |

Calling :

Age :

Solemanly affirmed and sworn in this court, in accordance with provisions of Act of 1873 on **10.07.2023.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தருமபுரி மாவட்டம் அதகபாடியில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். 7.3.2020 தேதி மதியம் 2.30 மணியளவில் பாப்பாரப்பட்டி காவல் ஆய்வாளர் அதகாடி EB அலுவலகத்திற்கு வந்து கம்பி திருடு போனது சம்பந்தமாக அங்கிருந்தவர்களை விசாரித்தார். அங்கு என்ன நடந்தது, அங்கு யார் யார் வீடுகள் உள்ளது அவர்கள் பெயர் என்ன என்று எழுதி கொண்டார்கள். அதை படித்து பார்த்து நானும் தமிழ்செல்வனும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படம் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது என்னுடையது. பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் அதகபாடி - தருமபுரிக்கு சேர் ஆட்டோ ஓட்டுகிறேன். இண்டூர் போலிசார் எனக்கு நல்ல பழக்கம் என்றால் ஓரளவுக்கு தெரியும். நான ் கையெழுத்து போட்ட பேப்பரை படித்து பார்த்தேன். சம்பவ தேதியான 7.3.2020 தேதி கம்பி திருடு போனது பற்றி இருந்தது. கம்பி திருடு போனதாக அதில் எழுதப்பட்டிருந்தது. நான் ஆட்டோ ஓட்டுனர் என்பதால் எனக்கு போலிசாரிடம் பழக்கம் என்றாலும், நான் போலிசார்தயார் செய்த பார்வை மகஜரில் காவல் நிலையத்தில்வைத்து கையெழுத்து போட்டு விட்டு தற்போது பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

## S.C.No. 37 of 2023

} Prosecution
Deposition of **P.W. 3** **(L.W. 3 )** } Defence
}

Name of the Witness : திரு.தமிழ்செல்வன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemanly affirmed and sworn in this court, in accordance with provisions of Act of 1873 on **10.07.2023.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி மாவட்டம் அதகபாடியில் வசித்து வருகிறேன். நான் முன்பு ஆட்டோ ஓட்டி வந்தேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 7.3.2020ஆம் தேதி மதியம் 2.30 மணிக்கு அதகபாடி EB அலுவலகம் முன்பு பாப்பாரப்பட்டி உதவி ஆய்வாளர் வந்துவிசாரித்து கொண்டிருந்தார். என்னிடம் பொருள்கள் காணாமல் போனது உண்மையா என்றுகேட்டார்கள். நான் ஆமாம் என்று சொன்னேன். சம்பவம் நடந்தது உண்மை தான் என்பதற்கு என்னை கையெழுத்து போட சொன்னார்கள். நான் போட்டேன். என்னுடன் சந்தோஷ் என்பவரும் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். இது சம்பந்தமாக போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் போகும் போது போலிசார் இருந்தார்கள். பொதுமக்கள் 20,30 பேர் இருந்தார்கள். நான் போவதற்கு முன்பாகவே அங்கு போலிசார் இருந்தார்கள். பொருள் காணாமல் போனதை நான் நேரடியாக பார்க்கவில்லை. நேரில் பார்க்காததால் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். நானும் சந்தோசும் ஆட்டோ ஓட்டுனர்கள் என்பதால் ஓவர் லோடு ஏற்றி போவதால் போலிசாருடன் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. என்னை காவல் நிலையத்திற்கு வரவழைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

**(Chapter XXII Code of Criminal Procedure)**
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

# S.C.No. 37 of 2023

| | | |
|---|---|---|
| Deposition of **P.W. 4 (L.W. 4 )** | } | Prosecution |
| | } | Defence |
| | } | |

Name of the Witness : திரு.முனியப்பன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemanly affirmed and sworn in this court, in accordance with provisions of Act of 1873 on **10.07.2023.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி மாவட்டம், காரிமலங்கலம் மின்சார நிலையத்தில் லைன் இன்ஸ்பெக்டராக வேலை செய்து வருகிறேன்.

இதற்கு முன்பாக நான் இண்டூர் மின்சார வாரியத்தில் கம்பியாளராக பணிபுரிந்து வந்தேன். 6.3.2020 தேதி அதகபாடி துணை மின் நிலையத்தில் இரவு 8 மணி முதல் அடுத்த நாள் காலை 8 மணிவரை எனக்க இரவு பணி நியமிக்கப்பட்டிருந்தது. 6ம் தேதி இரவு 1 மணியளவில் சம்பத் என்பவர் எனக்கு போன் செய்து 3 பேர் கேட் ஏறி வளாகத்திற்கு வருவதாக சொன்னார். அந்த 3 பேரை யார் என்ன என்று கேட்டவுடன் என்னை சட்டையை பிடித்து இழுத்து வந்து ரூமில் உட்கார வைத்தார்கள். என்னிடம் சாவி கேட்டார்கள். நான் சாவி இல்லை என்று சொன்னேன். அதில் ஒருவர் சுத்தி வைத்திருந்தார். என்னை இடது பக்க கை தோல்பட்டைக்கு கீழே சுத்தயால் அடித்தார். ருமுக்கு பின்புறம் மாட்டியிருந்த சாவியை எடுத்து போய் மெயின் கேட்டை திறந்து டாடா ஏசியை எடுத்து வந்தார்கள். 10 கட்டு மின்கம்பியை வண்டியில் ஏற்றி போய் விட்டார்கள். இது சம்பந்தமாக நான் இளநிலை பொறியாளர் முரளிக்கு தகவல் சொன்னேன். அவர் சம்பவ இடம் வந்து பார்த்தார். அவரிடம் நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர் காலையில் இண்டூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் அதகபாடி துணை மின் நிலையத்தில் இருந்து விட்டு காலை இண்டூர் அரசு ஆரம்பு சுகாதார நிலையத்திற்கு போனேன். அங்கு எனக்கு ஊசி போட்டு மாத்திரை கொடுத்தார்கள். பிறகு நான் இண்டூர் காவல் நிலையத்திற்கு போனேன். அன்று இரவு வந்தார்கள் கர்சீப்பால் முகத்தை கட்டியிருந்தார்கள். 3, 4, 5

எதிரிகள் தான் அன்றைய தினம் சம்பவத்தில் ஈடுபட்டார்கள்.

ஆவணம் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.